# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை
# சட்டபீடம்

## சட்டமாணித் தேர்வு, ஆண்டு III (நிகழ்நிலை) - 2021

## நிர்வாகச் சட்டம்
(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 06

ஏதேனும் **மூன்று (03)** வினாக்களுக்கு **மட்டும்** விடை தருக.

*(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)*

---

1. ‘‘இருபதாம் நூற்றாண்டின் கடந்த ஐம்பது வருடங்கள், நிர்வாகச் சட்டத்தில் ஒப்பற்ற நீதியியல் புத்தாக்கக் காலம் ஒன்றாகும். நீதிமுறை மீளாய்வுக்கான காரணிகள் குறிப்பிடத்தக்களவு நீடிக்கப்பட்டுள்ளதுடன், நீதிமுறை மீளாய்வுக்கு உட்படும் அமைப்புக்களின் வரையறையும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. நீதிமுறை மீளாய்வுக்கான அரசியலமைப்புச்சார் அடிப்படைகளின் மீதான விவாதத்தின் முக்கியத்துவம் ஒழிக்கப்பட்டுள்ளது. நியாயத்தன்மை (fairness) , சிறந்த நிர்வாகம், சமத்துவம் மற்றும் ஒப்புரவு என்ற கருத்தேற்புகள் எழுதப்பட்ட மற்றும் எழுதப்படாத அரசியலமைப்புகள் இரண்டினதும் முக்கிய விழுமியங்களாக நிலைபெற்றுள்ளன.’’

   நிர்வாகச் சட்டத்தின் மீதான அரசியலமைப்புசார் அடிப்படைகள் என்னும் நிலைப்பாட்டிலிருந்து மேலுள்ள கூற்றினை மதிப்பீடு செய்க. ஆங்கில மற்றும் இலங்கை நீதிமன்றங்களினால் பின்பற்றப்படும் வகிபங்கினை நுணுக்கமாக ஆராய்க.

   (100 புள்ளிகள்)

2. பொதுச் சுகாதாரச் சட்டமானது, பொதுச் சுகாதார நிபுணர்கள் செயற்குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், தொற்று நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கான ஒழுங்குவிதிகளை வெளியிடுவதற்கு சுகாதார அமைச்சருக்கு அதிகாரங்களை வழங்குகின்றது. தற்போதைய அமைச்சரவைசார் ஒழுங்குவிதிகளானவை, ஏனையவற்றுக்கு மத்தியில், சமூக இடைவெளி தொடர்பிலான ஒழுங்குவிதிகளை மீறுபவர்களை பொலிஸ் அலுவலர் கைது செய்வதற்கு அனுமதிக்கிறது. குறித்த ஒழுங்குவிதிகள், சந்தேகத்திற்கிடமான கொவிட் நோய்தொற்றுக்குள்ளான தனிநபர்கள் மீது துரித அன்ரிஜன் பரிசோதனை (RAT) நடாத்துவதற்கு பொதுச் சுகாதார அதிகாரிகளுக்கு (PHIs) அதிகாரமளிக்கின்றது. பல்வேறு தொழிற்சங்கங்கள் ‘மேம்பட்ட தொழில் நிலைமையினை’ கோருகின்ற நாடளாவிய போராட்டமொன்றினை அரங்கேற்ற திட்டமிடுகின்றன. ஊடக சந்திப்பொன்றில், அமைச்சர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: ‘எந்தவொரு போராட்டக்காரரும் இந்த அரசாங்கத்திற்கு

தொல்லைக் கொடுக்க அனுமதிக்கப்படார்’. குறித்த அதே நாளில், தொற்றுநோயியல் திணைக்களப் பணிப்பாளரை (DDoE) புதிய கட்டளைகளை வரையுமாறு அமைச்சர் கட்டளையிடுகின்றார். தொற்றுநோயியல் திணைக்கள பணிப்பாளர், 10 பங்கேற்பாளர்களுக்கு அதிகமாக பங்குகொள்ளும் அனைத்துவிதமான பொதுப் போராட்டங்களும் அமைச்சரால் தடை செய்யப்படுவதாகக் குறிப்பிட்டு பொலிஸ் மா அதிபருக்கு (IGP) கடிதமொன்றினை வழங்கினார். எனினும், பொதுச் சுகாதார பரிசோதகர்களின் தொழிற்சங்கம், போராட்டத்தில் ஈடுபடும் ஆடைத்தொழிற்சாலை வேலையாட்களான போராட்டக்காரர்களின் மீது துரித அன்ரிஜன் பரிசோதனையினை (RAT) நடாத்த மறுத்த வேளையிலிருந்து, பொலிஸ் மா அதிபர் (IGP) அன்ரிஜன் பரிசோதனை சாதனங்களை கையகப்படுத்தி, அவற்றை தமது அலுவலர்கள் பயன்படுத்தப் பயிற்சியளித்தார். 200 போராட்டக்காரர்கள் வரையில் இடமளிக்கத் தயார் நிலையில் வைத்திருக்குமாறு தனிமைப்படுத்தல் மையங்களுக்கு பொலிஸ்மா அதிபர் (IGP) மேலும் எழுதியிருந்தார்.

நிர்வாக நியாயாதிக்கம் தொடர்பிலான கோட்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்டங்கள் மற்றும் அதிகாரிகளினால் பிரயோகிக்கப்படும் தற்றுணிபு அதிகாரங்களின் பிரயோகங்கள் போன்றவற்றின் மீது கவனஞ்செலுத்தி இச்சூழ்நிலையினை ஆராய்க.

(100 புள்ளிகள்)

3. “விகிதாசாரத்துவ பரீட்சையின் (proportionality test) அதி ஆழத்தன்மையானது, ஏன் விகிதாசாரத்துவம் வென்னஸ்பரி நியாயத்தன்மையினை (Wednesbury reasonableness), நிர்வாக நடவடிக்கைகளை மீளாய்வு செய்வதற்கான பரீட்சையாக பதிலீடு செய்ய முடியாது என்பதற்கான காரணமாக நீதிபதிகளாலும் கல்வியியலாளர்களாலும் பார்க்கப்படுகின்றது. அதி நீதியியல் பணிவிணக்கம் (judicial deference) தேவைப்படும் வழக்குகளில் வென்னஸ்பரி பரீட்சையாக தொடர்ந்திருக்கும் அதேவேளை மிகத் துள்ளியமானதொரு மீளாய்வு தேவைப்படுகின்ற வழக்குகளில் விகிதாசாரத்துவம் நியமமாக பிரயோகிக்கப்பட வேண்டுமெனவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.”

மேலுள்ள கூற்றுக்கு எதிராக, இரு கருத்தேற்புக்களின் காரணகாரியப் பின்னணியினை நுணுக்கமாக ஆராய்க. தீர்க்கப்பட்ட வழக்குச் சட்டங்களுடன் தொடர்புப்படுத்தி ஐக்கிய இராச்சியம் மற்றும் இலங்கையில் இடம்பெற்ற வளர்ச்சிகளை ஒப்பீடு செய்க.

(100 புள்ளிகள்)

4. லின்டா என்பவள் கைத்துப்பாக்கி உரிமச் சட்டத்தின் கீழ் வருடாந்த புதுப்பித்தலுக்கு உட்பட்ட கைத்துப்பாக்கி ஒன்றிற்கான உரிமமொன்றினை வைத்துள்ளாள். 2021ஆம் ஆண்டு மார்ச்

மாதம் 02ஆம் திகதியன்று அணில் என்பவனின் வாடகைக் குடியிருப்பாளராகிய லின்டா, அவனுடன் அவளுக்கிருந்த பிணக்கொன்றின் காரணமாக அவனைக் கொலை செய்யப் போவதாக கைத்துப்பாக்கி ஒன்றினால் பயமுறுத்தியதாக பொலிஸ் அத்தியட்சகருக்கு முறைப்பாடொன்று அணிலிடமிருந்து கிடைக்கப்பெற்றது. லின்டாவினால் வாடகைக்குப் பெறப்பட்ட வீட்டின் மின்சாரப் பற்றுச்சீட்டுகளில் அவள் தனது பெயரை மாற்றீடு செய்ய முயற்சித்ததாக அணில் சாட்டுதல் செய்தான். 2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் 05ஆம் திகதியன்று பொலிஸ் அத்தியட்சகரிடமிருந்து அவளுடைய கைத்துப்பாக்கி உரிமத்தினை புதுப்பிக்க அவளை காரணம் காட்டுமாறு லின்டாவுக்கு கடிதமொன்று கிடைக்கப்பெற்றது. லின்டாவுக்கு எதிரான விசாரணை 2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07ஆம் திகதியன்று நடைபெற்றது. விசாரணையில், அவளுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட ஆவணங்களை பரிசோதிக்கும் வாய்ப்பு லிண்டாவுக்கு மறுக்கப்பட்டது. அவளுடைய வாய்மொழிமூல அளிக்கையினைச் செய்ய அவளுக்கு ஐந்து நிமிடங்கள் மட்டுமே வழங்கப்பட்டது. மேற்சொல்லப்பட்ட பிணக்குடன் தொடர்புடைய வீட்டின் மின்சாரப் பற்றுச்சீட்டுகளை தனது பெயருக்கு மாற்றீடு செய்ய அவளிடமிருந்து எந்தவொரு வேண்டுகோளும் விடுக்கப்படவில்லை என்பதை உறுதிசெய்ய தான் மின்சார சபையிடம் வேண்டுகோள் விடுத்திருப்பதாக விசாரணைக் குழுவுக்கு அவள் விளங்கப்படுத்தினாள். எவ்வாறாயினும், மின்சார சபையின் பகுதியில் இருந்த காலதாமதத்தின் விளைவாக தனது நிலைப்பாட்டினை நிருபிப்பதற்கு அவளுக்கு மேலும் காலஅவகாசம் தேவைப்பட்டது. அணிலை கைத்துப்பாக்கி ஒன்றினால் கொல்லப்போவதாக பயமுறுத்தியதாக கூறப்பட்ட பொய்யான குற்றச்சாட்டினை நிருபிக்க அவளது அறைத்தோழியை நேரடி சாட்சியாக முற்படுத்த லிண்டாவால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை மறுக்கப்பட்டது. குறித்த செயற்குழுவின் கண்டுபிடிப்புகளில் தங்கியிருந்து 2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12ஆம் திகதியன்று பொலிஸ் அத்தியட்சகர் அவளுடைய உரிமத்தினை ரத்துச்செய்தார். பொலிஸ் அத்தியட்சகரின் தீர்மானத்திற்கான காரணங்களைக் கண்டறிய லின்டா எடுத்த முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. இதனைத்தொடர்ந்து, கைத்துப்பாக்கி உரிமத்திற்கான மேன்முறையீட்டு குழுவுக்கு மேன்முறையீடு ஒன்றினை லின்டா செய்தாள். கைத்துப்பாக்கி உரிமத்திற்காக மேன்முறையீட்டு குழுவின் தீர்மானமே இறுதியானதும் முற்றானதும் என அச்சட்டம் ஏற்பாடு செய்கிறது. அவளுடைய மேன்முறையீட்டினது கேட்பில் முன்னைய விசாரணைக்குழுவில் அவளுக்கு எதிராக கருத்துரைத்த குழு உறுப்பினர்களில் ஒருவரான றைமண்ட் என்பவன் கைத்துப்பாக்கி உரிமத்திற்காக மேன்முறையீட்டு குழுவில் அமர்ந்திருப்பதை லிண்டா அவதானிக்கிறாள்.

மேற்குறித்த அதிகாரிகளின் தீர்மானங்களை லின்டா கேள்விக்குட்படுத்த விரும்புகின்றாள். லின்டாவுக்கு அறிவுரை கூறுக.

(100 புள்ளிகள்)

5. 2021ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 20ஆம் திகதியன்று சுற்றுலா விடுதியொன்றினை நிர்மாணிக்கும் நோக்குடன் பேர்ல் தேசிய பூங்காக்கு அடுத்துள்ள வலிவத்த என்னும் காணியொன்றினை காஞ்சனா கொள்வனவு செய்தாள். குறித்த காணியைக் கொள்வனவு செய்வதற்கு முன்னர், உள்ளூர் நகர சபையினை அவள் அணுகிய போது, நகர அபிவிருத்தி அதிகாரசபையே (UDA) அனைத்து அபிவிருத்தி திட்டங்களையும் அங்கீகரிக்க வேண்டுமென்பதால், குறித்த பிரதேசத்தில் தமக்கு அபிவிருத்தி தொடர்பான மட்டுப்பாடுகள் எவையும் இல்லை என அவளுக்கு அறிவித்திருந்தது. காஞ்சனாவின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில், புதிய கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு குறித்த பிரதேசத்தில் செய்யப்படும் அனைத்துவிதமான அபிவிருத்திகளும் அந்த அபிவிருத்தியைச் செய்பவர்களால், நகர அபிவிருத்தி அதிகார சபையின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள வேண்டுமென்று தேவைப்படுத்துகின்றதை தவிர வெளிப்படையாக எவ்வித அபிவிருத்தி தொடர்பான மட்டுப்பாடுகளையும் விதிக்காத ‘‘2007ஆம் ஆண்டு பேர்ல் தேசிய பூங்கா பாதுகாப்பு வழிகாட்டி விதிகள்’’ என்பதன் கீழான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமென காஞ்சனவுக்கு நகர அபிவிருத்தி அதிகாரசபை எழுதியது. 2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28ஆம் திகதியன்று காஞ்சானா தனது அபிவிருத்திக்கான விண்ணப்பத்தினை நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் சமர்ப்பித்த போதிலும், 2021ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11ஆம் திகதியன்று எந்த விபரங்களையும் வழங்காது ‘‘2007 ஆம் ஆண்டு பேர்ல் தேசிய பூங்கா பாதுகாப்பு வழிகாட்டி விதிகளை’’ மேற்கோள் காட்டி, நகர அபிவிருத்தி அதிகார சபை அவளின் விண்ணப்பத்தை நிராகரித்தது. 2021ஆம் ஆண்டு மே மாதம் 30ஆம் திகதியன்று அவளுடைய காணியின் கிட்டத்தட்ட 20 சதவீதம் பேர்ல் தேசிய பூங்காவுக்குச் செல்லுகின்ற வழியை விரிவாக்க நகர சபையினால் சுவீகரிக்கப்படும் எனத் தெரிவிக்கும் கடிதமொன்று காஞ்சனாவுக்கு கிடைக்கப்பெற்றது. காணி சுவீகரிக்கப்படுவதை (land clearance) எதிர்த்துப் போரிடும் பேர்ல் தேசிய பூங்காவின் பிரதேசவாசிகளை நகரசபை தலைவர் 2021ஆம் ஆண்டு ஜுன் மாதம் 5ஆம் திகதியன்று சந்தித்தார். பேர்ல் தேசிய பூங்கா பிரதேசத்தின் மக்களை கலந்துரையாடாமல் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது என வாக்குறுதியளித்தார். 2021ஆம் ஆண்டு ஜுன் மாதம் 30ஆம் திகதியன்று நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் நகர சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட தனியார் கட்டுமானக் கம்பனியொன்றான மெகா, வீதியை அகலப்படுத்துவதற்காக அப்பிரதேசத்தினை நிலவளவைச் செய்ய ஆரம்பித்தது.

நீர் காஞ்சனாவுக்கு அறிவுரை வழங்கும் சட்டத்தரணி குழாத்தில் ஒருவரென கருதிக்கொண்டு காஞ்சனாவுக்கு கிடைக்கக்பெறக்கூடிய நிவாரணங்களை வரையறை செய்து வழக்குச் சுருக்கமொன்றினை தயார் செய்க. குழாத்தில் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் வழக்குச் சுருக்கத்தினைத் வரைவதற்கு குறிப்பிட்ட பகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் உம்முடைய பணி, குறிப்பாக காஞ்சனாவின் உரிமைகள் மற்றும் எதிர்பார்ப்புக்களில் கவனஞ்செலுத்தி நிர்வாக நடவடிக்கைகளை மீளாய்வு செய்வதற்கான காரணிகளை கலந்துரையாடுவதாகும்.

(100 புள்ளிகள்)

6. மெகாலயன் வாவிகளைச் சூழ்ந்துள்ள கெய்ரோ கிராமத்தின் விவசாயிகளின் சேமநலனில் ஈடுபடுகின்ற சமூகத்தொண்டன் ஒருவனாக ரோய் என்பவன் உள்ளான். கைரோவில் அனேக குடும்பங்கள், அவர்களின் தனிப்பட்ட நுகர்வுக்கும், அவர்களின் வாழ்வாதாரத்தின் முக்கிய மூலமான விவசாயத்திற்கும் மெகலாயன் வாவிகளையே தங்கியுள்ளனர்.

பூர்வீகக் குடிகளின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி சட்டத்தின் (IDTCA) கீழ், சூழல் தாக்க மதிப்பீடு (EIA) ஒன்றைத் தேவைப்படுத்தாமல் உள்ளூர் சமூகங்களின் பொருளாதார அக்கறைகளினை கருத்திற் கொண்டு சிறிய அபிவிருத்தித் திட்டங்களை அங்கீகரிக்க கைத்தொழில் அமைச்சர் அதிகாரமளிக்கப்பட்டுள்ளார். அத்தகைய திட்டங்களை அங்கீகரிக்கையில், பூர்வீக வாழ்வாதாரங்களையும், உள்ளூர் சமூகங்களின் வழக்கங்களைக் கருத்திற்கொள்ள வேண்டியது அமைச்சரின் கடமையெனவும் பூர்வீகக் குடிகளின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி சட்டம் (IDTCA) கூறுகிறது. கெய்ரோவில் அமைந்திருக்கும் 100 ஏக்கர் விவசாயம் செய்யப்படாத அரச காணியினை ஒதுக்கும் ''மெகலாயன் வாவி கைத்தொழில் வலயம்'' எனும் திட்டத்திற்கு அமைச்சர் அங்கீகாரம் அளித்ததோடு, கைத்தொழில்களை அமைப்பதற்கான முன்மொழிவுகளை அவர் கோர தீர்மானித்தார். குறித்த திட்டத்தின் அமுலாக்கத்தினால் உருவாகக்கூடும் எதிரிடையான தாக்கங்கள் குறித்து கெய்ரோ விவசாயிகளிடமிருந்து பல்வேறு முறைப்பாடுகள் அமைச்சருக்கு கிடைக்கப்பெற்றது. விவசாயிகளின் அக்கறைகள் தொடர்பில் கருத்துரைக்க ஊடக சந்திப்பொன்றைக் கூட்டிய அமைச்சர், வேலை வாய்ப்புகள் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் உட்பட பல்வேறு நன்மைகள் உள்ளூர் சமூகங்களுக்கு இருக்கிறதென அமைச்சர் அறிவித்தார். குறித்த கைத்தொழில்கள் வாவியிலிருந்து பெருமளவிளான நீரை பயன்படுத்தும் எனவும் நில சுத்திகரிப்பானது உள்ளூர் சூழலியல் சமனிலையின் மீது பாரிய தாக்கத்தினை கொண்டிருக்குமெனவும் குறித்த திட்டத்தினை ரோய் மதிப்பீடு செய்து கண்டறிந்தாள். இது மெகலாயன் சமூகத்தின் பூர்வீக வாழ்வாதாரம் மற்றும் வழக்கங்களை எதிரிடையாகப் பாதிக்கும். சிறிய அபிவிருத்தித் திட்டங்களல்லாத திட்டங்களுக்கு சூழல் தாக்க மதிப்பீட்டை (EIA) தேவைப்படுத்துவது அமைச்சரின் கடமையாகுமென பூர்வீகக் குடிகளின் உட்கட்டமைப்பு அபிவிருத்திச் சட்டம் மேலும் ஏற்பாடு செய்கிறது. ஆதலால், மெகலாயன் திட்டம் சூழல் தாக்க அறிக்கைக்கு உட்பட்டது என ரோய் நம்புகின்றான்.

ரேய் எழுத்தாணை விண்ணப்பமொன்றின் மூலம் அமைச்சரின் தீர்மானத்தினைக் கேள்விக்குட்படுத்த விரும்புகின்றான். வழக்கிடு தகைமை தொடர்பான விதிகள் தொடர்பாகவும் உள்ளடக்கி ரேய்க்கு ஆலோசனை கூறுக.

(100 புள்ளிகள்)

**************